1992 ஏப்ரல் 20]

கட்டிடத்தைக் கட்டித் தருவதற்கு புரட்சித் தலைவியினுடைய அரசு முன்வருமா என்பதை மீண்டும் நான் பேரவைத் தலைவர் மூலமாக மாண்புமிகு அமைச்சர் பெருமகனாரிடம் அறிய விழை கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துரிதப்படுத்தப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 551, திரு. ம. சின்னசாமி, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

551—

பத்திர எழுத்தர்களை நியமிக்கத் தேர்வு

*6233— திரு. ம. சின்னசாமி :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா:—

(அ) பத்திர எழுத்தர்கள் (Document Writers) லைசென்ஸ் முறையை மாற்றும் செயற் குறிப்பு அரசின் பரி சீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசே அவர்களைத் தேர்வு செய்து நியமிக்கும் முறை கொண்டுவருமா ?

மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பதிவுத்துறையில் ஆவண எழுத்தர்கள் லைசன்ஸ் முறைபற்றி எந்த மாற்றமும் இல்லை. நடைமுறையில் உள்ள விதிப்படி எல்லாம் நடக்கும்.

முற்பகல் 9—35

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. கே. சின்னசாமி.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பத்திர எழுத்தர்கள் என்பவர்களால் இன் றைக்கு வெகுவாக கிராமப்புறங்களில் இருந்து வருகிற விவசாயி கள் பெரிதும். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. வி. கே. சின்னசாமி : பாதிக்கப்படுகிற நிலையில் இருக்கிறார்கள். இத்தனை ஏக்கர் பூமி, இவ்வளவு ரூபாய் சொத்துக்கு இவ்வளவு ரூபாய் தான் வாங்கவேண்டுமென்று ஒரு

குறிப்பிட்ட அளவை ஏதாவது அரசு நிர்ணயித்து இருக்கிறதா? அல்லது இந்த பத்திர எழுத்தர்கள் இந்த அளவுக்குப் படித்து இருக்கவேண்டுமென்ற ஒரு கட்டாயம் இருக்கிறதா ? இந்த பத்திர எழுத்தர்களுக்கு ஏதாவது அரசு பயிற்சி கொடுத்து இருக்கிறதா ? அப்படி இல்லை என்றால் இந்த பத்திர எழுத்தர்களுக்கு என்று ஒரு பயிற்சிப் பள்ளியை உருவாக்கினால் அது மிகவும் நலமாக இருக்கும். அதைச் செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆவண எழுத்தர்களுக்கு அரசு அனுமதி வழங்குகிறது. அனுமதி வழங்குவதற்கு முன்பாக அவர்களுக்கு தேர்வு வைத்து அந்தத் தேர்வில் தேறியவர்களுக்கு அரசு அனுமதி வழங்குகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த டாகுமெண்ட் ரைட்டர்களை பொறுத்த வரையிலும் நமது அரசு முழு சம்பளம் கொடுப்பது இல்லை. அவர்களே வேலை செய்து சம்பாத்தியம் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு ரிடையர்மெண்ட் ஏஜ் என்று ஏதாவது ஒரு ஸ்டேஜ் வைத்து இருக்கிறோமா? 55 வயதுக்குப் பின்னால் லைசன்ஸ் கொடுக்கப்படுவது இல்லை என்று ஆயிரக்கணக்கான டாகுமெண்ட் ரைட்டர்கள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, ரிடையர்மெண்டு ஏஜ் மாதிரி ஒரு ஏஜ் லிமிட் இல்லை என்று அரசு அறிவிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்னால் வந்த இடைக்கால அரசு அவர்களுக்கு வயது நிர்ணயம் செய்தது. இப்போது இருக்கிற மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு அதை நீக்கிவிட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு கி. தர்மலிங்கம்.

திரு. கி. தர்மலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பத்திர எழுத்தர்கள் பழைய காலத்தில் எழுதியது போல வடமொழியிலோ அல்லது இஸ்லாமிய காலத்தில் எழுதியது போன்று இன்னும் சில சொற்களை பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். நமது மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு தற்போது புதிய படித்த வாலிபர்களுக்கு அந்த பத்திரம் எழுதும் பயிற்சியைக் கொடுத்து தூய தமிழில் அந்த பத்திரங்களை எழுதுவதற்கு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

1992 ஏப்ரல் 20]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலம் முழுவதும் ஏறக்குறைய ஆவண எழுத்தர்கள், நகல் எழுத்தர்கள் 10 ஆயிரம் பேர் புதிதாக நியமிப்பதற்கு அரசு உத்தேசித்து இருக்கிறது. அதற்கு செய்தித்தாளில் அறிவிப்பு வந்திருக்கிறது. 30—5—1992-ல் தேர்வு நடைபெறும். அப்போது கூடியவரையிலும் மக்கள் புரிந்துகொள்கிற பேச்சு நடை அல்லது புழக்கத்தில் இருக்கிற தமிழ் சொற்களைப் பயன்படுத்துவதற்கு அரசு முயற்சி செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு, சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று பத்திரம் எழுதுகிறவர்கள் சட்டம் தெரியாமல் சரிவர பத்திரங்களை எழுதாத காரணத்தால் பல வழக்குகள் அவர்களாலேயே உருவாக்கப்படுகிறது. ஆகவே, சட்டம் படித்த வழக்கறிஞர்கள் மட்டுமே தான் உரிமைப் பெற்று இதுபோன்ற பத்திரங்களை எழுதவேண்டும் என்ற நிலையை அரசு உருவாக்கித் தருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பல வழக்கறிஞர்களை விட பத்திரம் எழுதுகிறவர்கள் திறமையான வழக்கறிஞர்களாக இருக்கிறார்கள். குறிப்பாக திரு. சி. ஞானசேகரன். (சிரிப்பு).

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டம் படித்தவர்களுக்கு மட்டுமே எல்லாவற்றையும் ஒதுக்குவதற்கு இந்த அரசு தயாராக இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. பி. ராஜு.

திரு. கே. பி. ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக கிராமங்களில் பத்திரம் எழுதுவதால் தான் சண்டை சச்சரவுகள் வருகின்றன. தோட்ட தகராறு வாய்க்கால் தகராறு, வரப்பு தகராறு, வீடு தகராறு, எல்லா தகராறுகளும் பத்திரம் எழுதுகிறவர்கள் தெரியாமல் புரியாமல் எழுதுகின்ற காரணத்தால் தான் சண்டை சச்சரவுகள் கிராமங்களில் வந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, பட்டப் படிப்புப் படித்தவர்களோ அல்லது பயிற்சி பெற்றவர்களோ அவர்கள் தான் டாகுமெண்ட் ரைட்டர்களாக வருவதற்கு, வரமுடியும் என்று சட்டம் இயற்ற அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன். ஏன் என்றால் ஏகப்பட்ட வழக்குகள் அதனாலேயே தீர்ந்து விடும். தெரியாமல் ஏதோ ஒரு பத்திரத்தை எழுதி விடுகிறார்கள். ஆகவே, இரண்டு வீட்டாரும் சண்டை போடுகிறார்கள். இந்த நிலையை மாற்றுவதற்கு அரசு ஒரு முற்றுப்புள்ளி வைக்குமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-40

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான முதலிலே இங்கே தெரிவித்தபடி இப்போது 10 ஆயிரம் பேரை நியமிப்பதாக இருக்கிறோம். கூடிய வரையிலே அவர்களுக்கெல்லாம் தேர்வு வைத்து, தேர்ச்சி பெற்றவர்களை நியமிப்பதாக இருக்கிறோம். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னபடி கிராமத்தில் இருக்கிற நிலச் சொந்தக்காரர்கள், நிலவுடைமையாளர்கள் வாங்குபவர்களும் விற்பவர்களும் அந்த அளவிற்கு விவரம் தெரியாதவர்கள் அல்ல. எவ்வளவு பத்திர எழுத்தாளர்கள் இருந்தாலும் யார் நன்றாக எழுதுகிறவர்கள் என்பது நடைமுறையிலே கிராம மக்களுக்கு நன்றாகத் தெரியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 552. மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப்படுகிறது.

வினா எண் 553, திரு. வே. பெரியசாமி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

553—

அரசினர் மேல்நிலைப்பள்ளிக்குக் கட்டிட வசதி.

348—திரு. வே. பெரியசாமி :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பெரியார் மாவட்டம் அந்தியூர் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்குப் போதிய கட்டிட வசதி இல்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், விரைவில் புதிய கட்டிடங்கள் கட்டிக் கொடுக்க துரித நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) 1991–92–இல் அந்தியூர் அரசினர் மேல்நிலைப் பள்ளிக்கு 3 வகுப்பறைகளை ரூ. 4.70 இலட்சம் செலவில் கட்ட அனுமதியளிக்கப்பட்டு, கட்டட வேலைகள் தொடங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.